# பாரதியார்

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

எழுதியவர்

சக்திதாஸன் சுப்பிரமணியன்

சென்னை-20

ஸ்ரீ வெங்கடரமண & கம்பெனி

சென்னை 5

1950

அணா 12

உரிமை ஆசிரியருக்கே.

SRI SARASWATHI VILASAM PRESS, MADRAS 18.

# முகவுரை

இஃது இருபதாம் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டிலே தமிழ் இலக்கியத்துக்குப் புதிய ஒளி தந்தவரில் முதல்வர் யார்? தூங்கிக் கிடந்த தமிழ்நாட்டைத் தமது கவிதா சாமர்த்தியத்தால் தட்டி எழுப்பியவர் யார்? அவரே சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியார் மகாகவியா சாதாரண கவியா என்பதுபற்றி இருவித அபிப்பிராயங் கொள்ளலாம். பாரதியின் கவிதை பற்றி பல வித கருத்துக்கள் வெளியிடலாம். ஆனால் தமிழ் நாட்டில்—தமிழ் இலக்கியத்தில்—ஒரு புரட்சி யுண்டு பண்ணியவர் பாரதியார் என்னும் விஷயத்தில் இருவித அபிப்பிராயங் கொள்ள இடமில்லை. தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி பீடத்திலே பாரதிக்கே முதல் ஸ்தானம் உரியது என்பதை யாரும் மறுத்தல் முடியாது.

"பாவால் பாரினை இயக்குவோன் பாவலன்." இன்று, தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலுங்கூட பாரதி பாட்டு, பரவி விட்டது. பாரதியின் பாட்டில் மயங்காதார் யார்?

கவிபாடுவோன் மாத்திரம் கவிஞனல்லன். வாழ்க்கையே கவிதையாகக் - கவிதையே

வாழ்க்கையாகக் - கொள்வோனே கவிஞன் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்வே கவிதை நிறம்பியது; அவர் இயற்கையிலேயே கவி ; பிறவியலேயே கவி ; கவிதையே வாழ்க்கையாகக் கொண்டார் ; வாழ்க்கையிலே கவிதை கண்டார் ; கவிதைக் கென்றே வாழ்ந்தார். கவிதா வெறி அவருடம்பில் ஊறியிருந்தது.

அத்தகைய கவிஞரின் வாழ்க்கை கவிதை ஆராய்ச்சி ஆகியன விரிவாக வெளிவர வேண்டுவது அவசியம். பாரதியாரின் சரித்திரம் சுருக்கமாக முதலில் பாரதி பிரசுராலயத்தாரால் வெளியிடப்பட்டது ; பின்னே ஸ்ரீமான் ஆக்கூர் அனந்தாச்சாரியார் சற்று விரிவாக எழுதினுர்.

ஆங்கில இலக்கிய உலகிலே பாஸ்வெல் என்பார் ஜான்ஸனின் சரித்திரத்தை எழுதினுர். அது பலராலும் புகழப்படுகிறது. அதேமாதிரி பாரதியின் சரித்திரத்தை எழுத வேண்டுமென்பது எனது அவா. எனது செயலில் நான் எவ்வளவு தூரம் வெற்றியடைய முற்பட்டுள்ளே னென்று மதிப்பிட வேண்டிய பொறுப்பு தமிழ் நாட்டவருடையது.

ஒருவரது குணத்தை அவரது வாழ்விலே நிகழும் சம்பவங்களால் அறியலாம். அதே மாதிரியாக, பாரதியாரின் பண்பினையும் அவர் தம் வாழ்வில் நிகழ்ந்த ருசிகர சம்பவங்களால் அறியலாம்.

பாரதியார் எழுதிய கடிதம் இப்புத்தகத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. அது அவர்தம் உள்ளத்தை நன்கு புலப்படுத்துகிறது. படிப்போர் சௌகரியத்தை உத்தேசித்துப் பாரதியின் சரிதச் சுருக்கமும் கவிதா ஆராய்ச்சியும் இப்புத்தகத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. பாரதியின் கவிதையிலே ஆர்வமுண்டு பண்ண எனது விமர்சனம் உதவி புரியுமென்று நம்புகிறேன்.

யான் சென்று கேட்டபொழுதுதத் தமக்குத் தெரிந்த சம்பவங்களை யெல்லாம் கூறியவர் பலர். ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், எட்டயபுரம் - வித்வான்-குருகுஹதாஸப் பிள்ளை 'சுதேசமித்திரன்' உதவியாசிரியராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் உலகநாத நாயகர், தற்போது "சுதேசமித்திரன்" உதவியாசிரியராயிருக்கும் ஸ்ரீ. நடேச அய்யர், சர்க்கரைச் செட்டியார், வ ராமஸ்வாமி அய்யங்கார் முதலியவர்கள் குறிப்பிடத்

தக்கவர்கள். இவர்களுக்கு யான் என்ன கைம் மாறு செய்ய வல்லேன்? என்று நன்றியைச் செலுத்துகிறேன்.

தமக்கு வந்த கடிதத்தை யான் வெளியிட்டுக் கொள்ள அனுமதித்த அன்பர் ஸ்ரீமான் பரலி. சு. நெல்லையப்ப பிள்ளைக்கு எனது நன்றி உரியதாகுக.

சக்திதாஸன் சுப்பிரமணியன்

---

THE MADURA TAMIL SANGAM

# வாழ்க்கைக் குறிப்பு.

---

### அன்னை

அன்னை வடிவமடா - இவள்
ஆதி பராசக்தி தேவியடா -

ஈசுவரன் தருமராஜா கோயில் தெரு என்று புதுச்சேரியிலே ஒரு தெரு இருக்கிறது. அந்தத் தெருவிலே ஒரு வீடு. வீட்டின் மாடியிலே திறந்த வெளியிலே ஒருவர் மண்டியிட்டு உட்கார்ந்திருக்கிறார்; ஆகாயத்தை அண்ணாந்து நோக்கியபடியே இருக்கிறார்; ஆகாயத்தை அப்படியே விழுங்கி விடுகிறவர் போலே பார்க்கிறாரே! அவர் யார்? அவர் தான் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்.

இரவு மணி பத்து. எங்கே பார்த்தாலும் ஒரே இருள். இயற்கைத் தேவி "இருளாயி" யுடன் கூத்தாடுகிறாள்; இருட்டு; இருட்டு; மையிருட்டு. அந்த மையிருட்டு நேரத்திலே மாடியிலே திறந்த வெளியிலே உட்கார்ந்திருக்கிறார் பாரதியார். அவருடன் கூட

வேறு ஒருவரும் இருக்கிறார். திடீரென்று துள்ளிக்குதிக்கிறார் பாரதியார்.

"அடே! சங்கரா! இந்த இருளைப் பாரடா! இதுதான் பராசக்தி. இந்த இருளிலே மகா காளி ஒரு பெண்மாதிரிக் காட்சி தருகிறாள் பார். இந்த மையிருட்டுத்தான் மகாகாளி. அவளைப் பார்த்துப் பிரார்த்தனை செய்" என்று ஆவேசம் வந்தவர் போலக் கூறுகிறார்.

தரையிலே மண்டியிட்டு உட்கார்ந்து ஆகா யத்தை அண்ணாந்து நோக்கிவிட்டார். அவ் வளவுதான்! மெய்ம்மறந்து அந்த இருளிலே ஈடுபட்டார். அப்பொழுது ஓர் அழகான பாட்டுப் பிறந்தது.

பின்னே ரிராவினிலே—கரும்
பெண்மை யழகொன்று வந்தது கண்முன்பு
கன்னி வடிவ மென்றே—களி
கொண்டு சற்றேயருகிற்சென்று பார்க்கையில்
அன்னை வடிவ மடா!—இவள்
ஆதி பராசக்தி தேவியடா!—இவள்
இன்னருள் வேண்டுமடா!—பின்னர்
யாவு மூலகில் வசப்பட்டுப் போமடா

இதுதான் அந்தப் பாட்டு. "மூன்று காதல்" என்ற தலைப்பின்கீழே ஒரு பாட்டுப் பாடி

யிருக்கிறுர் பாரதியார். முதலாவது சரஸ்வதி காதல்; இரண்டாவது லக்ஷ்மி காதல்; மூன்றுவது காளி காதல்.

இந்த மூன்று விதமான காதல் பாட்டுகளும் பாரதியாரின்வாழ்வு எப்படிப் பண்பட்டு எதிலே போய் முடிந்தது என்பதைக் காட்டு கின்றன.

இந்த அழகான பாட்டில் அந்தக் காளி காதல்தான் மிகவும் சிறந்தது. 'கன்னி வடிவ மென்றே களி கொண்டு சற்றே யருகிற் சென்று பார்க்கையில்' என்னும் அடிவரை தாழ்ந்த குரலில் பாடவேண்டும். பாடியபிறகு 'அன்னை வடிவமடா! இவள் ஆதிபராசக்தி தேவியடா! இவள் இன்னருள் வேண்டு மடா! பின்னர் யாவுமுலகில் வசப்பட்டுப் போமடா' என்ற வரிகளையெல்லாம் உயர்ந்த ஸ்தாயியில் குரலை உயர்த்திப்பிடித்துப் பாடினுல் அற்புதரஸம் அப்படியே 'கல கல' வென்று உதிரும்.

பராசக்தி நினைவு பாரதியாரின் நெஞ்சில் எவ்வளவு தூரம் வேரூன்றியிருந்தது என்ப தற்கு இந்தச் சம்பவம் போதாதா?

## புயல்

"வீட்டுக் குலதெய்வம் வீரம்மை காக்குமடா"

புதுச்சேரி ஈசுவரன் கோவில் தெருவில் ஒரு வீட்டில் குடியிருந்தார் பாரதியார். அதன் பிறகு அதே தெருவிலுள்ள இன்னொரு வீட்டுக்கு ஜாகை மாற்றினார். புதுவீட்டுக் குடி போன மறுநாள் பிரமாதமான புயல் அடித்தது. இரவு நேரம். அதாவது நள வருஷம் கார்த்திகைமாதம் எட்டாந்தேதி இரவு. கோரமான புயல். புயல்காற்று அடித்து ஜன்னல் கண்ணாடியை உடைத்து விட்டது. ஜன்னலின்கீழே பாரதியாரின் குழந்தைகள் படுத்திருக்கின்றன. உடைந்த ஜன்னல் வழியாகத் தூற்றலும் காற்றும் சீறியடிக்கின்றன.

அப்பொழுது பாரதியாரின் பத்தினியாகிய செல்லம்மாள் அவரை எழுப்பி விஷயத்தைத் தெரிவித்தார். அப்பொழுது ஒரு ரஸமான கீதம் பாடினார் பாரதியார். அது வருமாறு:

**மனைவி:**

காற்றடிக்குது கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகனே.
தூற்றல் கதவு சாளர மெல்லாந்
தொளைத் தடிக்குது பள்ளியிலே

கணவன்

வானஞ் சினந்தது; வைய நடுங்குது
வாழி பராசக்தி காத்திடவே
தீனக் குழந்தைகள் துன்பப் படாதிங்குத்
தேவியருள் செய்ய வேண்டுகின்றோம்.

இந்தப் பாட்டினுலே கவிஞர் தேவியை ஸ்தோத்திரம் செய்தார்; மறுநாள் காலையிலே எழுந்து வாசலிலே போனுர். நேற்றுவரை அவர் குடியிருந்த வீடானது, அன்றிரவு அடித்த புயலிலே வீழ்ந்து நாசமாய் விட்டது. உடனே பாரதியார் பாடினுர் :

மனைவி

நேற்றிருந்தோ மந்த வீட்டினிலே இந்த
நேரமிருந்தால் என்படுவோம் ?
காற்றென வந்தது கூற்றமிங்கே நம்மைக்
காத்தது தெய்வ வலிமையன்றோ ?

இந்த விதமாகப் பாரதியாரும் அவரது குடும்பத்தாரும் தேவியின் கருணையைச் சிந்தித்து இருந்தனர்.

பொழுதும் விடிந்தது. கீழ்க் கடலிலிருந்து கதிரவன் எட்டிப்பார்த்தான். நேற்று இரவு புயலால்நிகழ்ந்த சேதத்தைப் பார்ப்பதற்கோ?

# பிழைத்த தென்னந்தோப்பு

" வறியவ னுடைமை - அதனை
வாயு பொடிக்க வில்லை "

**ஊ**ருக்கு வெளியே ஒரு சிறு தென்னந் தோப்பு. அத்தோப்பின் நடுவிலே ஒரு மடு. பாரதியார் தம் மனைவி மக்களுடன் அடிக்கடி அந்தத் தோப்புக்குச் செல்வார். காலையிலே எழுந்திருந்து பாரதியார் தோப்புக்குப் போய் விடுவார். சாதம் பிசைந்து எடுத்துக் கொண்டு அவர் மனைவியாரும் குழந்தைகளுடன் அந்தத்தோப்புக்குப் போவார். காலையிலே சென்ற பாரதியார் பதினொருமணிவரை அந்த மடுக்கரையில் உட்கார்ந்து ஏதாவது எழுதிக் கொண்டிருப்பார். பதினொருமணியானதும், எழுதுவதை நிறுத்திவிட்டு அந்த மடுவிலே இறங்கி நீராடுவார்; சூரியனைப் பார்த்துக்கொண்டே அரைமணிநேரம் இடுப்பளவு ஜலத்தில் நின்றுகொண்டு வேத மந்திரங்களை ஜெபிப்பார். ஸ்நானம் முடிந்தபின் சாப்பிட்டுவிட்டு மரநிழலில் இளைப்பாறுவார்; மறுபடியும் ஏதாவது எழுதுவார். சாயங்காலம் எல்லாருமாகத் திரும்பி வீடுசேர்வர். அந்தத் தோப்பு முத்தியாலுப்பேட்டை

வெல்லிச்சு செட்டியார் என்ற கிருஷ்ணசாமி செட்டியாருடையது. பாரதியார் உல்லாசமாகக் காலங் கழிக்கவேண்டுமென்பதற்காகச் செட்டியார் அந்தத் தோப்பைப் பாரதியாருக்குக் கொடுத்திருந்தார். பாரதியார் குயில் பாட்டுப் பாடியதும் இந்தத் தோப்பில்தான்.

புயல் அடித்த மறுநாள் காலை பாரதியார் தமது தோப்பினைப் பார்க்கச் சென்றார் போய்ப்பார்த்தால் பக்கத்துத் தோப்புகளில் எல்லாம் ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் முறிந்து கிடந்தன. ஏராளமான சேதம். ஆனால் பாரதியாரின் தோப்பிலோ ஒரு மரங் கூட முறிந்து விழவில்லை. அதைக்கண்டவுடனே பாரதியாருக்கு ஆனந்தம் பொங்கியது. ஏழையாகிய பாரதியாருக்கு எவ்வித நஷ்டமும் அளிக்கக் கூடாதென்றே கடவுள் அந்தத் தோப்பில் சேதம் விளைக்கவில்லையென்று நினைத்தார்; உடனே கடவுளின் கருணையை வியந்து 'பிழைத்த தென்னந்தோப்பு' என்ற தலைப்புள்ள பாட்டைப்பாடினார்.

## சிறுமை சீறிய வீரன்

"சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா"

"வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்" என்ற தலைப்பிட்டு ஒரு கவி இயற்றியிருக்கிறார் பாரதியார். அதிலே 'சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா, என்பது ஓர் அடி.' அந்தச் சிறுமை கண்டு சினங்கொண்டு பொங்கி யெழுந்து கோபிக்கும் குணம் பாரதியாரிடம் அமைந்திருந்தது.

ஹோம்ரூல் கிளர்ச்சி நடந்த காலத்திலே திலகரது சிஷ்யர்கள் ஒரு சமயம் அன்னை வசந்தையார் என்று சொல்லப்படும் அன்னி பெஸண்டைக் கண்டிப்பதுண்டு. அந்த மாதிரியான கண்டனக் கூட்டம் ஒன்றுசென்னைக் கடற்கரையிலே நிகழ்ந்தது. அக் கூட்டத்திலே பாரதியார் பேசினார்; பேசும் பொழுது அன்னை பெஸண்டை 'அவள்' என்று குறிப்பிட்டார். அது அன்னி பெஸன்ட் பக்தர் சிலருக்குச் 'சுருக்' கென்று பட்டது போலிருக்கிறது! 'அவள்' என்று குறிப்பிடக்கூடாது. 'அவர்' என்று சொல்ல வேண்டும்' என்று அவர்கள் ஆக்ஷேபித்தார்கள் 'அவள்' என்பது மரியாதைக் குறை

வான பாஷை யென்பது அவர்களது எண்ணம்.

உடனே பாரதியாருக்குக் கோபம்வந்துவிட்டது. தம்மை யாரோ அவமரியாதை செய்வதாக அவர்கருதி விட்டார்; தமக்குத் தமிழ் தெரியாது என்று நினைத்தே அவர்கள் அப்படிச் சொன்னதாக எடுத்துக்கொண்டார். உடனே அவருக்கு அடங்காத கோபம் வந்தது; முகம் சிவந்தது; மீசை துடித்தது. 'எனக்குத் தெரியும்' தமிழ் என்று கர்ஜித்தார் அவர் அவ்விதம் கர்ஜித்து ஒரு குதிகுதித்துப் பிளாட்பாரத்தை மிதித்து அதிரச் செய்தார். அன்னி பெஸன்ட்; அவள் ; 'அவள் ; அவள் என்று கோபத்தோடு பலதடவை சொன்னார். பெண்மணிகளை அவள் என்று குறிப்பது மரியாதைக் குறைவான பாஷை யன்று என்பது அவரது எண்ணம். அதை யார் கண்டார் ?

பக்கத்திலே யிருந்தவர்கள் எல்லாரும் பயந்துபோய் விட்டார்கள்.

இந்தச் சம்பவம், பாரதியாரின் சுதந்திர இறுமாப்பையும் சிறுமை கண்டு பொங்கும் தன்மையையும் காட்டுகிறது.

## யாவும் பராசக்தியே !

"அனைத்துயிரினும் அன்னை யுருவாய்
இலங்கும் தாய் திருதேவி யாரோ
அன்னவள் போற்றி அன்னவள் போற்றி
போற்றி போற்றி"

தேவி மகாத்மியம் - மொழிபெயர்பு

சென்னை, மத்தியத் தொழிலாளர் சங்கத்துக்குப் பாரதியார் ஒரு சமயம் சென்றிருந்தார். தமிழ் நாட்டின் தவப்புதல்வர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும் அப்பொழுது அங்கே இருந்தார். சங்கத்திலே அன்னிபெஸன்ட் படம் மாட்டப்பட்டிருந்தது. "இந்த அம்மாளை எல்லாரும் திட்டுகின்றனரே" என்று அப்படத்தைப் பாரதியாருக்குக் காட்டிக் கூறினார். ஸ்ரீமான் முதலியார்.

"அவளையா திட்டுகிறார்கள் ! அவள் பராசக்தியன்றோ?" என்று சொன்னார் பாரதியார் சொல்லிவிட்டுப் பத்து நிமிஷம் அந்தப் படத்தையே உற்றுக்கவனித்தார். கவனித்துவிட்டு,

"நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர் மணிப்பூண்"

என்ற பாட்டைப் பாடினர். அரசியல் கொள்கையிலே மாறுபட்டிருந்தபோதிலும் பெண்ணை தெய்வமாகப் பாரதியார் பாவித்திருந்தார் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

## பாரத ஸமுதாயம் வாழ்கவே

"தனியொருவனுக்கு உணவிலை எனின்
ஜகத்தினை அழித்திடுவோம்"

ஸ்வர்க்கவாசி ஸ்ரீயுத வ. வெ. சு. ஐயர் தலைமையில் சென்னைக் கடற்கரையில் ஒத்துழையாமைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திலே பாடுமாறு ஸ்ரீயுத ஐயர் பாரதியாரை அழைத்தார். பாரதியார் "பாரத ஸமுதாயம் வாழ்கவே" என்ற பாட்டைப் பாடினார்; அதன்பின் அல்லா! அல்லா! என்ற பாட்டுப்பாடினார். பாட்டைக் கேட்ட மக்கள் பரவசமானார்கள். அந்த நாளையிலே மின்சார விளக்குக் கிடையாது. கியாஸ் லைட் உண்டு. கியாஸ் லைட் கண்டிராக்டரான முஸ்லிம் ஒருவருக்குப் பாரதியாரின் அல்லாப் பாட்டைக் கேட்டதும் அளவற்ற ஆனந்தம் பொங்கிவிட்டது. உடனே அவர் ஓடிப் போய் சோடா வாங்கி வந்து பாரதியாருக்குக் கொடுத்துச் சாப்பிடச் செய்து விசிறி கொண்டு விசிறி பாரதியாரின் ஆசுவாஸத்தைத்தணித்தார். அதுவே கடைசி முறையாகப் பாரதியார் பொதுக் கூட்டத்திலே தலை காட்டியதாகும். அதன்பின் அவரது காலம் அருகிவிட்டது.

## ஸம்ஸார ஸாகரம்

"ஸம்ஸாரம் என்கிற இந்த மரம் விஷ வித்தி லிருந்து முளைக்கிறது. பல வகையான கர் மங்களும் இம் மரத்தின் பல்வேறு கிளைகள்; எண்ணங்கள் இலைகள்; காமமே மலர் இந்த மாதிரியான துயர்க்கடலில் பாபியாகிய யான் தவிக்கிறேன்."

—சங்கர பகவத்பாதர்

தாம் ஓர் இராணுவ வீரர் என்ற எண் ணம் பாரதியாருக்கு எப்பொழுதுமே உண்டு. சட்டையின் புஜம் இரண்டிலும் இரண்டு பெரிய 'சேப்டிபின்' குத்திக்கொண்டிருப்பார். மார்புப் பக்கத்திலே சட்டையில் ஒரு பெரிய பின் குத்திக்கொள்வார். இந்த மாதிரி அலங் காரம் செய்து கொள்வதிலே அவருக்கு ஆனந்தம்.

ஒரு நாள் ஆபீஸ் இல்லை. காலைநேரம். பாரதியார் வீட்டிலேயிருந்தார். அப்பொழுது அவர் துளசிங்கப்பெருமாள் கோயில் தெரு வில் ஒரு வீட்டில் வசித்தார். அன்று அவ ரைப் பார்க்க ஒரு நண்பர் வந்தார். நண்பரும் பாரதியாரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவரது மனைவியார் வந்தார்; "இந்த மாதிரி வீணைச் சட்டையிலே 'பின்'னைக் குத்தித் துணியை வீணாக்கலாமா? எத்தனை தரம் சொன்னாலும் கேட்க மாட்

டேன் என்கிறீர்களே" என்று சொல்லிக் கொண்டுவந்து பின்னை எறிந்து விட்டுப் போனார்.

உடனே பாரதியாரின் முகம் சுண்டிப்போயிற்று. 'ஏதடா! மூன்றாவது மனுஷர் எதிரிலே நமது மனைவி நம்மை இகழ்கிறாளே' என்ற எண்ணமோ என்னவோ தெரியவில்லை. தம் குழந்தையான பாபாவைக் கூப்பிட்டார். "பாபா! பாபா! அம்மாகிட்டே போயி சட்டையைத் துவைக்க வேண்டாமென்று சொல்லு" என்று உத்தரவு போட்டார்; அப்படியும் அவர்மனம் நிம்மதியடையவில்லை; "தம்பீ! சிறிது நேரம் இங்கேயே உட்கார்ந்திரு. இதோ வநதுவிடுகிறேன்" என்று சொல்லி விட்டுப் பக்கத்து அறைக்குள் போனார்; போய் சிறு குழந்தை மாதிரி 'விம்மி விம்மி' அழுதார்; அரைமணி நேரம் அந்த மாதிரி அழுதபின்பு கண்ணைத் துடைத்துக்கொண்டு நண்பர் இருக்குமிடத்துக்கு வந்தார் "தம்பீ! ஸம்ஸாரம் பண்ணுவதென்றால் ஸாமானியமா? எவ்வளவோ கஷ்டம்" என்று கூறினார். கவிஞர் மனம் எவ்வளவு இளகியது. என்பதை இதிலிருந்து அறியலாம்.

## இயற்கையில் ஆனந்தம்!

பாரதியார் "சுதேசமித்திரன்" உதவியாசிரியராயிருந்தபோது அந்தக் காரியாலயம் சென்னை ஏரபாலு செட்டித் தெருவில் இருந்தது. திருவல்லிக்கேணியிலிருந்து பட்டணம் போய் வருவதற்கும் இடைவேளைச் சிற்றுண்டிக்குமாக அவரது மனைவியார் பாரதியாரிடம் காசு கொடுப்பார். கவிஞர் பணத்தை வாங்கிக்கொண்டு தெருக் கோடிவருவார்; வந்ததும் அந்தக் காசைக் கண்டபடி வீணைகச் செலவழிப்பார்; கைக் காசு செலவழிந்துபோம். உடனே தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு நடையைக் கட்டி விடுவார். திருவல்லிக்கேணியிலிருந்து நடந்தே ஆபீஸ் போவார்; சிற்றுண்டி யருந்தும் பொழுது யாராவது அவரைக் கூப்பிட்டு மனமுவந்து கொடுத்தால் வாங்கிச் சந்தோஷமாகத் தின்பார்; இல்லாவிடில் பட்டினி தான்!

மாலை நேரத்திலே சூரியன் மலைவாயில் வீழுங் காட்சியைக் காண்பதென்றால் அவருக்கு மிக்க ஆனந்தம். ஆபீஸின் வெளிப்புறத்திலே ஒரு தாழ்வாரம். அதிலே நின்று கொண்டு சூரியாஸ்தமனமாகும் காட்சியை

அவர் கவனித்துக்கொண்டே யிருப்பார்; அதிலேயே மெய்ம்மறந்து ஈடுபட்டு விடுவார். யார் கூப்பிட்டாலும் காதில் விழாது. எவ்வளவு சப்தம் போட்டாலும் அவரது கவனத்தைத் திருப்பவே முடியாது. அவ்வளவு தூரம் மெய்ம் மறந்து அந்த மாலைக் காட்சியிலே அவர் ஈடுபட்டு விடுவார்.

பாரதியாருக்குப் பூமாலையில் அபார மான பிரியம். அரளிப்பூ முதலிய சிவப்புப் பூக்களையெல்லாம் தொடுத்து ஒரு மாலையாகக் கழுத்திலேபோட்டுக்கொள்வதில் அவருக்கு மிகுந்த ஆசை.

"காக்கை குருவி எங்கள் ஜாதி"

**பா**ம்பின் கால் பாம்புக்குத் தெரியும். சிற்றுண்டிக்காகக் கொடுக்கும் காசைக் கண்டபடி செலவழித்துவிட்டுப் பட்டினி கிடப்பார் பாரதியார் என்பது அவரது மனைவிர்க்குத் தெரியும். ஆகவே அந்த அம்மணி என்ன செய்வாரென்று கேட்டால் கணவர் வரும் வேளையில் ஏதாவது சிற்றுண்டி செய்து வைத்துக்கொண்டு காத்திருப்பார். பாரதியார் வீடுவந்ததும், செல்லம்மாள் அதை அன்புடன் கொண்டுவந்து கொடுப்பார். 'ஏ தடா! நாள் முழுவதும் பட்டினிகிடந்தோமே! இதை அப்படியே தின்றுவிடுவோம்' என்ற எண்ணம் பாரதிக்குத் தோன்றுவதே யில்லை. அந்தச் சிற்றுண்டியை எடுத்துக் குருவிக்குக் கொஞ்சம்போடுவார்; பூனைக்குக் கொஞ்சம்; காக்காய்க்குக் கொஞ்சம்; போக மீதியைத் தின்பார்.

# தேம்பி யழுதார்

"இன்றைக்கு எங்கள் வீட்டில் ஸொஜ்ஜி பண்ணியிருக்கிருள். நீயும் வா! நான் காலையிலே தின்றேன்; ரொம்ப ருசியாயிருந்தது" என்று சொல்லி பாரதியார் 'ஒரு' நண்பரைத் தமது வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தார்; வந்து அவரை ஓரிடத்தில் அமர்த்தி உள்ளே போய்ப்பார்த்தார்; ஸொஜ்ஜி வழக்கமாக வைக்கப்படும் இடத்திலே தேடினர். அங்கே 'ஸொஜ்ஜி' யில்லை. உடனே பாரதியார், நண்பர் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார். "தம்பீ! நீ தங்கக் கம்பியென்றால் தங்கக் கம்பி. பத்தரை மாத்துத்தங்கம். நீ 'ஸொஜ்ஜி' சாப்பிடவேண்டுமென்று உன்னை அழைத்து வந்தேன்; ஸொஜ்ஜியில்லை; ஆய்விட்டதுபோலிருக்கிறது" என்று சொல்லித் தேம்பித் தேம்பியழுதார் பாரதியார். "அதனால் என்ன! பாதகமில்லை. ஆய்விட்டது போலிருக்கிறது. இன்னொரு நாள் தின்றால் போகிறது. நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்" என்று நண்பர் தேறுதல் கூறினர். இருந்தாலும் பாரதியார் மேலும் மேலும் அழ ஆரம்பித்தார். பின்னர் மறுபடியும்சென்று தேடியபொழுது 'ஸொஜ்ஜி'க்

கிண்ணம் கிடைத்தது. உடனே சிறு குழந்தையைப்போலே துள்ளிக் குதித்தார் பாரதியார். அவர் முகத்திலே சந்தோஷம் தாண்டவமாடிற்று.

பாரதியார் கள்ளங்கபடமற்ற உள்ளமுடையவர். குழந்தைபோன்ற மனமுடையவர்.

# தோழமை

''தோழனுடன் சம்பாஷிப்பதைக் காட்டிலும் பெரிய இன்பம் வேறில்லை''

—சுகிர்லாபம்

**பா**ரதியாருக்கு நண்பர்களிடத்திலேஅபாரமான பிரியம். ஒரு சமயத்திலே தேனும்பேட்டையிலே ஒரு நண்பர் பிரசங்கத்துக்கு ஏற்பாடு பண்ணியிருந்தார். அது சரியான வெயில்காலம். பிரசங்கம் ஐந்து மணிக்கு ஆரம்பம்.

பாரதியார் என்ன செய்தார்! நடு வெயிலில் ஒரு ரிக்ஷா வைத்துக் கொண்டு பகல் சுமார் ஒரு மணிக்குத் தம் நண்பர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்,

''என்ன! இந்த வெயிலில் புறப்பட்டு வந்தீர்கள்?'' என்று விசாரித்தார் நண்பர்.

''தம்பீ ! நீ பஞ்சதந்திரக் கதை வாசித்திருக்கிறாயா? 'மித்திரனை விடச்சிறந்தவன் வேறில்லை ; மித்திரனுடன் அளவளாவுவதே இன்பம்' என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறதே! தெரியுமா! நீ நல்ல பிள்ளை. அதனால் தான் வந்தேன்'' என்றார் பாரதியார்.

பிறகு இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

## பாரதி பட்டம்பெற்றது

எட்டயபுரம் ஜோதிஷ வித்துவான் ஸ்ரீமான் குருகுஹதாஸப் பிள்ளை அவர்கள் வீட்டில் தான் பாரதியார் அடிக்கடி பேசிக்கொண்டிருப்பார். 1896-ம் வருஷத்திலே திருநெல்வேலி ஸென்ட்ரல் ஹிந்து காலேஜில் மெட்ரிகுலேஷன் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தார். அந்த வருஷம் அவர் ஸெலக்ஷன் பரீக்ஷையில் தேறவில்லை. அவ் வருஷம் இறுதியிலே, அதாவது, 1896 ம் வருஷம் நவம்பர் மாதக் கடைசியிலே ஒரு நாள் பாரதியார் எட்டயபுரம் குருகுஹ தாஸப் பிள்ளையவர்கள் வீட்டிலிருந்தார். அப்பொழுது விருதை சிவஞான யோகியார் என்பவரும் அங்கே யிருந்தார். பாரதியார் ஸெலக்ஷன் பரீக்ஷயில் தோல்வியடைந்தது பற்றி அவர் ஏளனம் செய்தார்.

"என்ன! வாய்ப் பேச்சுதான்! பரீக்ஷை தேற முடியவில்லையே" என்றார் அவர்.

"பரீக்ஷை தேறிப்பட்டம் பெறுவதற்காக நான் படிக்கவில்லையே!" என்று பாரதியார் பதில் கூறினார். அதன் பேரில் ஒரு விவாதம் நடந்தது. அப்படியானால் ஒரு

பொதுக் கூட்டத்தில் பேசுமாறு விருதை சிவஞான யோகியார் பாரதியாருக்குச் சுவால் விடுத்தார். உடனே அன்றைய மாலையே பொதுக்கூட்டத்தில் 'கல்வியின் திறன்' என்பது பற்றிப் பேசப்போவதாக பாரதியார் கூறிச் சென்ருர். குறித்த நேரத்தில் கூட்டமும் நடைபெற்றது. அக் கூட்டத்திலே பதினுலு வயது சென்ற பாரதியார் கேட்போர் வியக்கத்தக்க விதமாகப் பேசினுர். அன்றைய தினம் தான் குருகுஹதாஸப் பிள்ளை வீட்டில் விருதை சிவஞான யோகியாரால் 'பாரதி' என்ற பட்டம் சுப்பிரமணிய பாரதியாருக்குச் சூட்டப்பட்டது.

# உலாமடல்

சுமார் 250 வருஷங்களுக்கு முன்பு எட்டயபுரம் சமஸ்தானத்தில் கடிகைமுத்துப் புலவர் என்று ஒரு வித்துவான் இருந்தார். பெத்தண்ணதளவாய், உமறு புலவர், ஆகியவர்கள் அவரது சிஷ்யர்கள். பெத்தண்ண தளவாய் எட்டயபுரத்தவர் மீது ஓர் "உலாமடல்" பாடியிருக்கிறார். அந்த உலாமடல் சொல் நயம் பொருள் நயம் சிறந்து விளங்குவது; அந்த மாதிரி யாராலும் பாட முடியாது என்று புகழப்படுவது. இவ்வாறு பலரும் அந்தஉலாமடலைப்பற்றி புகழக்கேட்ட பாரதியார் சுமார் 200 வரிகளில் அதே மாதிரி ஓர் அழகான "உலாமடல்" பாடினார். பாடி, அதைச் சபையோர்முன் படித்துக் காண்பித்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. ஆனால், சில புலவர்கள் பொறாமை மிகுதியினாலே சபையில் புகுத்த மனமில்லா திருந்தார்கள். அதுகண்டு பாரதியாருக்குக் கோபம் வந்தது. அவர்கள் முன்னிலையிலேயே அதைக் கிழித்தெறிந்து விட்டு வந்தார்.

## கம்பனைப்போலவும் பாடலாம்

'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்"

இந்த சம்பவம் நிகழ்ந்த இரண்டு மாதங்களுக்கெல்லாம் இன்னொரு விஷயம் நிகழ்ந்தது. "அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தைப்போல பாமர ரஞ்சிதமாகப் பாட முடியாது" என்று பலரும் கூறினர். அது கேட்ட பாரதியார் சிரித்தார். "சிரிப்பதிலே பிரயோஜனமில்லை. பாடிக் காண்பிக்க வேண்டும்" என்று சிலர் கூறினர். 'சரி' யென்று சொல்லிவிட்டுப் போனார் பாரதியார்; அன்று மாலை ஓர் அழகான காவடிச் சிந்து பாடிக்கொண்டு வந்தார்; அதை சபையோருக்குப் படித்துக் காண்பித்தார். அது பண்டித பாமர ரஞ்சிதமாயிருந்ததுகண்டு எல்லாரும் வியந்தனர்.

"இந்த உலகிலே எந்தக் கவிஞனைப்போலவும் பாடலாம். பாடமுடியாதென்பதில்லை கம்பனைப் போல வேண்டுமானாலும் பாடலாம்" என்று சொல்லி அந்தப் பாட்டையும் கிழித்தெறிந்தார் நம் கவிஞர்.

## 'அன்று அங்கே ; இன்று இங்கே'

படிப்பெல்லாம் முடிந்தபிறகு பாரதியார் எட்டயபுரம் சமஸ்தானத்திலேயே உத்தியோகம் வகித்து வந்தார். அப்படியிருக்கும் நாளில் அவருக்கும் சமஸ்தான மன்னருக்கும் ஏதோ மனஸ்தாபம் நிகழ்ந்தது. அதனாலே மன்னர் சமஸ்தான உத்தியோகத்திலிருந்து அவரை விலக்கி விட்டார். அன்றிரவு ஒரு தெருவிலே தீப்பற்றிக்கொண்டது. அவ்விடத்திலே பாரதி அன்பர் பலரும் கூடியிருந்தனர். பாரதியும் ஒரு சால்வையைப் போர்த்திக்கொண்டு அங்கே போயிருந்தார். "இது என்ன இப்படி நெருப்புப் பற்றிக்கொண்டதே!" என்று ஒருவர் கேட்டார். உடனே பாரதியார் பின்வருமாறு சொன்னார் :

"அன்று இராவணன் ஒரு கவியை - குரங்கை- இம்சித்தான். அதன் பயனாக அங்கே - இலங்கையில் - தீ மூண்டது. இன்று எட்டயபுரம் சமஸ்தானாதிபதி ஒரு கவியை - என்னை இம்சித்தார் இதோ இங்கே நெருப்புப் பிடித்துக்கொண்டது."

# சுண்டைக்காய் பூமி

பின்னருடன் கொண்ட மனஸ்தாபத்தால் பாரதியார் உத்தியோகத்திலிருந்து விலகினர் என்ற செய்தி பாரதி நண்பர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் சும்மாயிருப்பார்களா? எப்படியாவது பாரதியை மறுபடியும் சமஸ்தான ஊழியத்தில் நுழைக்க வேண்டிய முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் "மதியாதார் தலைவாயில் மிதிக்க வேண்டாம்" என்ற இறுமாப்புக் கொண்டவரன்றோ பாரதியார்?

"எட்டயபுரம் ராஜா சுண்டைக்கா யளவு பூமியை வைத்துக்கொண்டிருக்கிறார். உலகம் மிகப்பெரியது. அதிலே எனக்கு இடமிருக்கிற தென்று சொல்"

என்று கூறி பாரதியார் சமஸ்தானத்திலே வேலை செய்ய மறுத்தார்.

## கருங்குரங்கு கட்டவிழப் பெற்றது

ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண பிள்ளை என்பவர் தென்காசியிலே ஸப் ரிஜிஸ்டிரராயிருந்த போது பாரதியார் அவர் வீட்டில் தங்கியிருந்தார். அது 1921-ம் வருஷம். ஸ்ரீ பிள்ளையவர்கள் வீட்டில் ஒரு கருங் குரங்கு கட்டப்பட்டிருந்தது. அதைக்கண்ட வுடன் பாரதியாருக்கு அதனிடத்திலே இரக்கம் தோன்றி விட்டது. குரங்கு பந்தத் திலிருப்பதை அவரால் சகிக்க முடியவில்லை. உடனே அதற்கு ஏதோ உபதேசம் செய்யப் போவதாகச் சொல்லிவிட்டு அதன் காதில் என்னவோ ஓதினர்; பிறகு அவர்களைப் பார்த்துச் சொன்னர்:

“ஐயா! இப்பொழுது நம்மிடையே பேசப் படுகிற ஆதி திராவிடர்களுக்கும் பாவியான இந்த அநாதி திராவிடனைக் கட்டவிழ்த்து விட்டுப் பார்த்தீர்களானல் அவனது குறும்பு யாவும் அடங்கிச் சாதுவாயிருப்பான்” என்ருர். உடனே கட்டவிழ்த்து விடப்பட்டது. பாரதியார் சொன்னபடியே சாதுவாய் இருந்தது அந்தக் குரங்கு.

## பெரியார் மொழி

"இரவி யெழுந்தது முதல் எற்படுவரை
இவ்வுலகு நின்புகழ் கேட்பதாக"

—மெகாலே

லக்ஷ்மணசிங் தேவோ என்பவர் ஒரு பெரியார்; ஆரிய ஸமாஜி; நேபிள்ஸ், ரோம் ஆகிய பலவிடங்கள் சுற்றியவர்; ஆபிரிக்காவில் வசித்திருந்தார்; போயர் யுத்தத்தின் போது அங்கிருந்து புறப்பட்டுக்கொழும்பு மார்க்கமாக எட்டயபுரம் வந்தவர். இவரது இயற்பெயர் இன்னதென்பது யாருக்கும் தெரியாது. 1899 முதல் 1902 மார்ச்சுவரை அவர் எட்டயபுரத்தில் வசித்துவந்தார். அவர் தாடி வளர்த்திருப்பார். பாரதியார் அவரை 'மிஸ்டர் பார்பா' என்று கூப்பிடுவார். 'பார்பா' என்றால் தாடி என்று பொருள் அங்கே அளவளாவிக்கொண்டிருந்த பாரதியாரைப் பார்த்ததும். "இவர் இன்னும் சில காலத்திற்கெல்லாம் சர்க்கார் தொல்லைக்கு ஆற்றாது அஞ்ஞாதவாசம் செய்வார். அதன் பின்பு இவரது புகழ் மிக்கோங்கும்" என்றார். லக்ஷ்மண சிங். அவ்வாறு சொல்லக் காரணம்

என்னவென்று விசாரிக்கப்பட்டது. "என்னவோ எனக்குத் தோன்றியதைக் கூறினேன்" என்றார் லக்ஷ்மண சிங். ஆனால் பிற்காலத்திலே தான் அது உண்மையாகி விட்டதே.

## "ஷெல்லியன் கில்டு"

ஆங்கிலக் கவிஞர்களாகிய ஷெல்லி, பைரன் ஆகிய இருவரது நூல்கள்மீதும் பாரதிக்கு எல்லையற்ற பற்று. எப்போதும் 'ஷெல்லி'யைக் கையிலேயே வைத்துக்கொண்டிருப்பார்.

1902-ம் வருஷம் எட்டயபுரத்திலே பெருமாள் கோவில் சந்நிதித்தெருவிலே பாரதி ஒரு சங்கம் ஸ்தாபித்தார்.... அதற்கு "ஷெல்லியன் கில்டு" என்று பெயர். பின்காலத்தில் பாரதியாரின் "இந்தியா" பத்திரிகையில் உதவியாசிரியராகவிருந்த எட்டயபுரம் ஸ்ரீமான்-பி. பி. சுப்பையா என்பவர் அந்தச் சங்கத்திலே ஓர் அங்கத்தவர். எட்டயபுரம் அ. கைலாசம் பிள்ளை என்பவரும் அதிலே ஓர் உறுப்பினர்.

அந்தச் சங்கத்திலே பாரதியார் ஷெல்லியின் கவிதாரஸங்களையும், பைரனின் தேசிய கீதங்களையும் படித்துக் காண்பிப்பார்.

எட்டயபுரம் சமஸ்தானதிபதியுடன் மனஸ்தாபம் ஏற்பட்டதனுலே பாரதியார் அவ்வூரைவிட்டுக் கிளம்பினுர். கிளம்பி மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டித ஊழியம் புரிந்தார். அது 1904-ம் வருஷத்திய நிகழ்ச்சி.

அப்பொழுது பாரதியார் ஒரு நூல் இயற்றினுர். அதற்கு "மூடசிகாமணிகள் நக்ஷத்திர மாலே" என்று பெயர். நக்ஷத்திரங்கள் மொத்தம் இருபத்தேழு அல்லவா? அதே மாதிரி இருபத்தேழு விருத்தப்பாக்களாக அந் நூலே எழுதினுர்; அதிலே சிலரது பெயரைக் குறிப்பிட்டே திட்டிப் பாடியிருந்தார்.

மதுரை கந்தசாமிக் கவிராயர் முதலிய பல புலவர்களிடம் அவர் அந்த நக்ஷத்திர மாலேயை வாசித்துக்காண்பித்தார். மதுரை சங்கப்பா என்பவர் ஒரு கிழப்பிராமணர்; வேதாந்தி. அந்த நக்ஷத்திர மாலேயை வாசித்துக் காண்பிக்க வேண்டுமென்று அவர் பாரதியாரைக் கேட்டுக்கொண்டார். பாரதியாரும் அதற்கு இணங்கினுர். மதுரை 'பேரையூர் பங்களா'வில் அது படிக்கப்பட்டது. பெரியவர் அதை நன்ருகக் கேட்டார்.

"நூலிலே கூறப்பட்டிருந்த விஷயங்கள் யாவும் உண்மையே. ஆனாலும் உன்னைப் போன்றவருடைய வாழ்வுக்கு இதனாலே இடையூறுண்டாகும். ஆனதினாலே இதைக் கிழித்தெறி" என்று பாரதியாரிடம் கூறினார் அப்பெரியார். பெரியவரது சொல்லை மதித்துப் பாரதியாரும் அந்த நூலைக் கிழித்துப் போட்டார்.

## பாதிரியார் பாராட்டு

''விளையும் பயிர் முளையிலே தெரியும்''

திருநெல்வேலி ஜில்லாவில் 'நாஸரெத்' என்று ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே ஒரு பாதிரியார் வசித்து வந்தார். அவர் பெயர் ரெவரண்டு ஏ. கானன் மெகாஷியஸ் அவர் அக்காலத்தில் இருந்த 'பிரைமரி போர்டு' தலைவரா யிருந்தார். பிரைமரி பரீக்ஷை எழுதி சர்டிபிகேட் வாங்குவது ஒரு பெரிய கௌரவமென்று அக்காலத்திய இளைஞர்கள் எண்ணினார்கள். ஆதலினாலே ஏராளமான பேர் அப் பரீக்ஷைக்குப் போவதுண்டு. பாரதிக்கும் அந் தப் பரீக்ஷை பாஸ் செய்ய வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அப்பொழுது எட்டயபுரத்தில் ஏ. வி. ஸ்கூல் என்று ஒரு பள்ளிக்கூடமிருந்தது. சங்கர ஐயர் என்பவர் அந்தப் பள்ளிக்கூடத்தின் எட்மாஸ்டர், அவரிடம் பாரதியார் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அவரும் பாரதியாரின் விருப் பத்துக் கிணங்கிச் சில மாணவர்களுடன் அவரையும் பரீக்ஷைக்கு அனுப்பினார். அந்த வருஷத்திலே சுமார் இருநூறுபேர் அந் தப் பரீக்ஷைக்குச் சென்றனர். எல்லாரும் சாத்

தூரில் மேற்படி பாதிரியார்முன் ஆஜரானார். ஒவ்வொருவரையும் தமக்குத் தெரிந்த ஓர் இங்கிலீஷ்பாட்டைப் பாடுமாறு பாதிரியார் கேட்டார். பாரதியார் 'டுவிங்கில் டுவிங்கில் லிட்டில் ஸ்டார்' என்ற இங்கிலீஷ் கவியை மிகுந்த உற்சாகத்துடனும், ரஸாபாவத்துடனும் அபிநய பூர்வமாகப்பாடிக் காட்டினார். அது கண்டு பாதிரியார் அடங்கா மகிழ்ச்சி கொண்டார். சங்கரய்யர் என்பவரிடம் "இந்தச் சிறுவன் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்தால் உடனே லண்டனிலுள்ள ஏதாவதொரு சர்வகலாசாலைக்கு இவனை அனுப்புமாறு இவன் தந்தையிடம் சொல்லுங்கள்". என்று கூறினார்.

இளமையிலேயே பாரதியார் பாட்டிலும் கவிதையிலும் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருந்தார் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

# பாரதியாரும் சங்கீதமும்

1899-902 ஆகிய வருஷங்களில் முத்துசாமி தீக்ஷதர் அவர்களின் தம்பியார் குமாரர் சுப்ப ராம தீக்ஷதர் என்பவர் 'ஸங்கீத ஸம்பிரதாய ப்ரதர்ஸினி' என்றதோர் அரிய ஸங்கீத நூலை இயற்றிக் கொண்டிருந்தார். எட்டயபுரம் மன்னர் அதற்கு வேண்டிய பொருளுதவி புரிந்தார். அந்த சமயத்திலே சென்னை சீப் ஸெக்ரிடேரியட் ஆபீஸ் மானேஜரா யிருந்தவரும், 'பிராசீனகானம்' (Oriental Music in European Staff Notation) என்ற புத்தகத்தின் ஆசிரியருமான ஏ. எம். சின்ன சாமி முதலியாரும். அங்கே இது சம்பந் தமாக வந்திருந்தார். 72 மேளங்களின் தார தம்யங்கள் பற்றி அங்கே சர்ச்சை நடை பெறும். சின்னசாமி முதலியாரவர்களின் இடைவிடாத நண்பராயிருந்து அவ்வப் போது அவருக்குவேண்டிய உதவிகளைப் புரிந்தவர் எட்டயபுரம் ஸ்ரீ குருகுஹதாஸப் பிள்ளை அவர்களாவர். அவர்களுடனே பாரதியாரும் மேற்படி சங்கீத விவாதம் நடக்கு மிடத்துக்குச் செல்வார்; சென்று ராக லக்ஷணங்கள் அவற்றின் சஞ்சாரங்கள் முதலியவைகளைத் தெளிந்து அப்யஸிப்பார்.

ஸ்ரீ சுப்பராம தீக்ஷதர்பேரிலே பாரதி ஒரு சரம கவிபாடியிருக்கிறார். பின்னே 1908:ல் பாரதி எட்டயபுரம் போயிருந்தார். அப்பொழுது ஸ்ரீ சுப்பராம தீக்ஷதர் வீட்டுக்குப் போனார். ‘ஸங்கீத ஜோதி மறைந்ததே’ என்று வாய்விட்டுக் கூறினார். பாரதியும் தீக்ஷதரும் முன்பு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த இடத்தைப் பத்து நிமிஷம் உற்று நோக்கினார்; கல கலவென்று கண்ணீர் உகுத்தார். அவ்விடத்தை வீழ்ந்து நமஸ்கரித்து விட்டுப் போய்விட்டார்.

# பூ மழை பொழிந்தார்

சுதேசிக் கப்பல் ஓட்டிய தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை கைது செய்யப்பட்டு ரிமாண்டில் இருந்தபொழுது, பாரதியார் அரசாங்கத்தின் உத்தரவு பெற்று அவரைப் பார்க்கச் சென்றார். சிறையிலே தமிழ் நாட்டுத் தேசபக்தர் அடைபட்டுக்கிடந்தார். பாரதியார் அவரைப் பார்க்கப் போகும் பொழுது ஒரு கூடை நிறையப் பூ வாங்கிக் கொண்டு போயிருந்தார். அந்தக் கூடை பூவையும் சிதம்பரம் பிள்ளை மீது வர்ஷித்து ஆனந்தக்கண்ணீர் பொழிந்தார் பாரதியார்.

## குவலயானந்த மொழி பெயர்ப்பு

ஸம்ஸ்க்ருதத்திலே 'குவலயானந்தம்' என்று ஒரு நூல் இருக்கிறது. அதை ஸ்ரீ. சங்கர சாஸ்திரிகள் தமிழில் மொழி பெயர்த்தார். எட்டயபுரம் மீனுட்சி சுந்தரக் கவிராயர் அதைப்பாட்டாகப் பாடினுர். எட்டயபுரம் சின்ன ராஜாவால்அது அச்சிடப்பட்டது. அப்பொழுது பாரதியார் எட்டயபுரத்திருந்தார். "தமிழ் மொழிபெயர்ப்பிலே சில குற்றங்கள் இருக்கின்றன. மூல நூலிலே அவ்விதம் இருந்திருக்க முடியாது." என்று பாரதி சாதித்தார். சாதித்த பிறகு அதை மெய்ப்பித்தும் காட்டினுர். உண்மையில் மூல நூலிலே அக்குற்றம் இல்லை. அப்பொழுது பாரதிக்கு அவ்வளவாக ஸம்ஸ்க்ருதம் தெரியாது. "இம்மாதிரி நூல் இயற்றுவது பெரிய காரியமில்லை. சமஸ்தானம் கேட்டுக் கொண்டால் இயற்றித்தருவேன்" என்று கூறினுர் பாரதியார்.

## சமரசம் எங்கே?

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மமித் தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தவ ராயினும் ஒன்றே.

மேடைப் பிரசங்கிகள் சிலர் உண்டு. பிரசங்க மேடைமீது நின்று சரமாரியாக அவர் சமரச போதனை செய்வார். மேடையை விட்டுக் கீழே இறங்கியதும் அவரது சமரச உணர்ச்சி ஓடி விடும். ஆனால் பாரதி அப்படிப்பட்டவரன்று. சாதி மத பேதங் கருதக்கூடாதென்பது பாரதியாரின் கொள்கை. அதையே அவர் தமது பாட்டிலே முழக்கி யிருக்கிறார்.

பாரதிக்கு யாராயிருந்தாலும் கவலையில்லை. சுத்தமாயிருந்து அவர் மனதுக்குப் பிடித்திருந்தால் அவரிடமிருந்து வற்புறுத்தி வாங்கித் தின்பார். ஒரு சிறு விஷயம் பாருங்கள்.

நண்பர் ஒருவர் தினமும் ஆபீஸுக்குத் தயிர் சாதம் கொண்டு வருவார். அவர் வேறு ஜாதியினர்; பாரதி வேறு ஜாதி. இருந்தாலும் பாரதிக்கு அவர் பேரிலே அதிக பிரியம்.

அந்த நண்பர் டிபன் சாப்பிடும் பொழுது பாரதி ஓடி வந்து அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் இலையிலிருந்து ஒரு பிடி எடுத்து வாயில் போட்டுக்கொள்வராம்.

அந்த நண்பர் கடையிலிருந்து 'பஜ்ஜி' வாங்கி வைத்துக்கொண்டு தொட்டுக்கொள்வாராம். 'இதை ஏன் வாங்கினாய்? வீட்டிலிருந்தே சட்னி கொண்டு வரப்படாதோ? என்று பாரதியார் சொல்வாராம்.

## 'ராடிகல் கிளப்'

சென்னை இராமசாமி தெருவில் பாரதியார் 'ராடிகல் கிளப்' என்று ஒரு சங்கம் ஏற்படுத்தினார். சென்னை வக்கீல் ஸ்ரீ எஸ். துரைசாமி அய்யர், சர்க்கரைச் செட்டியார், பால் ஆகிய பலரும் அந்தச் சங்கத்திலே அங்கத்தவர். அங்கே எப்படித் தெரியுமா? பிராமணர்கள் எல்லாரும் சாப்பிடுவதற்கு உட்கார்ந்துகொள்ளவேண்டியது. பிராமணரல்லாதார் - கிறிஸ்தவருங்கூட - சமைத்துப் பிராமணர்களுக்குப் பரிமாற வேண்டியது. இந்த மாதிரியாக ஒரு பெரிய புரட்சியை உண்டு பண்ணியது அந்த சங்கம்.

# முதுமையில் மண்

ஒரு நாள் தெரு வழியாகவே பாரதியார் இன்னொரு நண்பருடன் போய்க்கொண்டிருந் தார். அப்பொழுது ஒரு சிறுவன் 'இளமையிற் கல்' என்று வாசித்துக் கொண்டிருந்தான். அதைக் கேட்டவுடனே பாரதியார் 'முதுமை யில் மண்' என்று சிரித்துக்கொண்டே கூறி ஞர். கூடவிருந்த நண்பர் 'இவர் என்னடா இப்படிச் சொல்கிருரே' என்று நினைத்தார். திடீரென்று பாரதியார் அப்படியே நடுத் தெருவில் நின்று கொண்டார்.

'இளமையில் கல்' என்று மாத்திரம் சொல்லி நமக்கு நல்ல கல்வி யளியாததாலே இரண்டு தலை முறையாக நாம் இளமையில் கல்லாகி விட்டோம். இப்பொழுது மண்ணுய்ப் போனும்' என்று கூறிஞர். சமயோ சிதமாகச் சடக்கென்று நகைச் சுவையுடனே பேசுங்குணம் பாரதியாருக்கிருந்தது என்ப தற்கு இதுவே அத்தாட்சி.

# கீரை வாங்கியது

'எல்லாரும் ஓர் குலம்'

பாரதியார் ஒரு சமயம் கறிகாய் வாங்குவதற்காகக் கடைக்குப் போனார். ஒரு ரூபாய் கொடுத்து ஒரு சுமை கீரையை வாங்கித் தலையிலே சுமந்துகொண்டு வீடுவந்து சேர்ந்தார். கீரைச் சுமையைப் பார்த்ததும் 'எதற்கு இவ்வளவு. யார் சமைக்கிறது? நமக்குக் கொஞ்சம் போதாதோ' என்றார் அவரது மனைவியார். 'உனக்கு வேண்டியதைச் சமை கீரை கூட சமைப்பதற்கு இல்லாத வீட்டுக்கெல்லாம் கொண்டு போய்க்கொடுத்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லி, பாரதியார் கீரையை ஒவ்வொருவர் வீட்டுக்கும் எடுத்து விநியோகம் செய்தார். 'எல்லாரும் ஓர் குலம்' 'முப்பது கோடியும் வாழ்வேம்' என்று பாடிய கவியன்றோ?

## சக்தி காப்பாள்

'அன்பு வடிவாகி நிற்பள்
தன்பெலா மவளிழைப்பள்
ஆக்க நீக்கம் யாவுமவள் செய்கை''

நாஸ்திகர் ஒருவர் அரவிந்தர் ஆசிரமத்துக்கு வந்தார். அரவிந்தர் அவரை வ. வே. சு. அய்யரிடம் அனுப்பி ஆஸ்திகராக்குமாறு கூறினர். வ. வே. சு. அய்யர் 'ஐயோ! இது என்னால் முடியாத காரியமாச்சே! பாரதியிடம் போ' என்ருர். நாஸ்திக நண்பரும் வேறு சிலரும் பாரதியுடன் அவர் வீட்டு மாடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது 'பாபா' திடீரென்று மாடியிலிருந்து விழுந்து விட்டது குழந்தை விழுந்தால் பரபரப்புடன் ஓடுவ தன்ருே வழக்கம்? 'ஓம் தத்ஸத் முற்றிற்று' என்று சொன்ருராம் பாரதியார். சொல்லி விட்டு அவர் பாட்டிலே எவ்வித கவலையுமில்லாது பேசிக்கொண்டிருக்கிருர். என்ன ஐயா! குழந்தைக்கு என்னவென்று பார்க்காமல்பேசிக்கொண்டிருக்கிறீர்' என்று கேட்டால். 'காப்பாற்றுவதற்குப் பராசக்தியிருக்கும்போழுது நான் ஏன் போகவேண்டும்?,

என்று பதிலளித்தார் பாரதியார். இவ்வி தம் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே கீழே விழுந்த குழந்தை யாதொரு காயமுமின்றிச் சந்தோஷமாக மேலே ஓடி வந்தது. நாஸ்திக நண்பர் இது கண்டு பிரமித்துப்போனார்.

## சக்தி தருவாள்

நம்பினார் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால்
அதிக வரம்பெறலாம்

**கையில் காசில்லை.** வீட்டுக்குப் போனால் மறுவேளை சாப்பாட்டுக்கு என்ன செய்வதென்ற யோசனை. இங்கிலையிலிருந்த பாரதியாரிடம் ஒருவர் பத்து ரூபாய் கொடுத்தார். ரூபாயை வாங்கிக் கொண்டு பாதி வழி வருகையில் ஒருவன் பாரதியைக் கண்டு தன் கஷ்டத்தைக் கூறினனும். பாரதியாரின் மனம் இளகிற்று. உடனே அவனிடம் அந்தப் பத்து ரூபாயையும் கொடுத்துவிட்டார். 'என்னய்யா! சோற்றுக்கு வழியில்லை. கையிலிருந்த ரூபாயைக் கொடுத்து விட்டீர்!' என்று அருகில் இருந்தவர் கேட்கவே 'சக்தி தருவாள்' என்று கூறிக்கொண்டே வீடுவந்தார் பாரதியார். வீட்டிலே சாப்பாடு தயாராயிருந்தது. எப்படியோ சமையலாய் விட்டது!

## அரசியல் விவாதம்

பாரதியார் அரசியல் விஷயங்களில் தீவிரமான நோக்கமுடையவர். ஆயினும் கொள்கை விஷயமாக எவ்வளவு சண்டை போட்டாலும் பிறகு அதை மறந்து நட்புக் கொண்டாடுவது பாரதியின் வழக்கம். ஸ்ரீமான் ஜி. ஏ. நடேசனும் பாரதியாரும் அரசியல் விஷயம் பற்றி விவாதிக்கும்போது பெரும் சண்டை போடுவார்களாம். பின்னே இருவரும் சந்தோஷமாகப் பேசிக் கொள்வாராம். அன்று ஆவணி அவிட்டம். ஸ்ரீமான் ஜி. ஏ. நடேசன் 'காமோகார்ஷி' ஜபம் செய்து கொண்டிருந்தார்! 'என்ன! நடேசா! என்ன செய்கிறாய்!' என்றார் பாரதி.

'காமோகார்ஷி ஜபம்' என்ற பதில். Love did, Man did, Good morning, Good morning என்று அதை மொழிபெயர்த்துச் சொன்னார் பாரதியார்.

## நாவிதனை நமஸ்கரித்தார்

சோர்ந்து உட்கார்கிறவரைக் கண்டால் பாரதிக்குப் பிடிக்காது. ஒரு சமயம் க்ஷவரம் பண்ணிக் கொள்ள நாவிதனை அழைத்திருந் தார். நாவிதன் வந்து கத்தியைத் தீட்டி வைத்துவிட்டுச் சோர்ந்து உட்கார்ந்திருந் தான். உடனே பாரதிக்குக் கோபம் வந்தது. பளீரென்று அவன் கன்னத்தில் ஓர் அறை விட்டார். நாவிதன் பயந்து நடுங்கி அழுது விட்டான். அதைக் கண்டதும் பாரதிக்கு மனம் இளகியது. கோபம் தணிந்தது. 'அவன் பாவம்! ஒன்றுந் தெரியாதவன் தானே! எல்லாம் தெரிந்த நான் அவனை ஏன் அடித்தேன்' என்று தம்மை நொந்துகொண் டார். உடனே அந்த நாவிதன் காலில் சாஷ் டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

## கழுதையை முத்தமிட்டது

புதுச்சேரி வாசம் பாரதியாரைப் பெரிய ஞானியாக்கியது எனலாம். புதுவையிலிருந்து வெளிவந்ததும் பாரதியார் ஜீவன்முக்தராக விளங்கினார். ஸர்வமும் ஈசுவராம்சமாகவே அவருக்குத் தோன்றியது. கடையத்திலே இருக்கும் பொழுது ஒரு நாள் ஒரு கழுதையைக் கண்டார் பாரதியார். அதனிடம் சென்று அதை அன்புடன் கட்டியணைத்துத் தழுவிக் கொண்டு முத்தமிட்டார். அது கண்டு அவரைப் பரிகசித்தவரும் உண்டு. ஆனால் அந்த ஜீவன்முக்தரின் செயல்களின் உயர்வையும், அவற்றின் உன்னத தத்துவங்களையும் அறிந்து போற்றக் கூடியவர் வெகு சிலரேயன்றோ!

சென்னை இராயப்பேட்டையிலே 'குகானந்த நிலயம்' என்றோரிடமுண்டு. ஒரு நாள் அங்கே பாரதியார் விஜயம் செய்தார். அன்பர் சிலர் அவரைப்பாடுமாறு கேட்டனர். உடனே பாரதியார் நின்று கொண்டார். அவர் எதிரே சுப்பிரமணியர் படம் அழகாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டே 'வருவாய் மயில் மீதினிலே' என்ற பாட்டைப் பாட ஆரம்பித்தார். பாட்டுப் பாடப் பாட அங்கே உட்கார்ந்திருந்தவர்க்கெல்லாம் உணர்ச்சி பொங்கியது. 'இன்னும் சிறிது நேரம் பாடினால் எனக்கு ஆவேசம் வந்திருக்கும்' என்று ஒவ்வொருவரும் பிறகு சொல்லலாயினர்.' பாரதியார் பாடக் கேட்டால் நம்மையும் மறந்து உணர்ச்சி பொங்கும்.

---

# பாரதி சரிதம்

“பாண்டிய நாட்டிலே பிறந்த ஒவ்வொரு உயிரும் கவி. பாண்டிய நாட்டின் கல்லும் மண்ணும் கவிபாடும் சக்தியுடையன” இது கவிஞர் திலகம் சுப்பிரமணிய பாரதியாரின் வாக்கு. ‘பாண்டி நாடும் தமிழும்’ என்னும் பொருள்பற்றி ஒரு சமயம் பாரதியார் ஒரு கல்லூரியில் சொற்பொழிவு ஆற்றினார். அப்பொழுதுதான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் கூறியது.

அத்தகைய பாண்டி நாட்டிலே திருநெல்வேலிக் கடுத்த எட்டயபுரம் சமஸ்தானத்திலே பாரதியாரின் தந்தையார் வித்வானயிருந்து வந்தார். அவர் பெயர் சின்னஸாமி ஐயர் என்பது. அவர் பிராமண ஜாதியிலே பிரஹசரண வகுப்பைச் சேர்ந்தவர்; ஆங்கிலம் அறிந்தவர் : தமிழிலே பாண்டித்யமுடையவர்: மேற்கு நாட்டுக் கணிதத்திலே நிபுணர்; பெருங்குண முடையவர்; எட்டயபுரத்தில் பஞ்சாலே ஏற்படுத்தியவர்.

அவர் எட்டயபுரம் கிராம முன்சீபு ஸ்ரீ ராமசாமி ஐயரின் குமாரி ஸ்ரீமதி லக்ஷ்மியை முதல்

தாரமாகக் கலியாணம் செய்துகொண்டார். அவ்விருவருக்குமே பாரதியார் பிறந்தார். அது 1882-ம் வருஷம் நவம்பர் மாதம் ஆகும். அக்குழந்தைக்குச் சுப்பிரமணியன் என்று பெயரிப்பட்டது.

சுப்பிரமணியத்துக்கு ஐந்து வயதான பொழுது அவரது அன்னையார் இறந்தார். 'என்னை யீன்றெனக் கைந்து பிராயத்தில் ஏங்கவிட்டு விண்ணெய்திய தாய்' என்று பாரதியாரே தமது சுயசரிதையில் கூறுகிறார். தாயிழந்தசேயைத் தந்தையார் பரிவுடன் வளர்த்து உரிய பிராயத்தில் பள்ளிக்கனுப்பினார்.

பள்ளியில் படிக்கும்பொழுதே பாரதியார் தம் தந்தையுடன் சமஸ்தானத்துக்குச் செல்வார்; அங்கே தமிழ் வித்வான்கள் செய்யும் சல்லாபங்களைக் கவனிப்பார் பாரதியாரின் தந்தையும் வித்வான். பாரதியார் பழகிய இடமும் வித்வத் சபை. ஆனதினாலே இளவயதில் இயற்கையாகவே பாரதியாருக்குக் கவிதா சாமார்த்தியமுண்டாயிற்று. புலவர்கள் அளிக்கும் ஈற்றடிகளை வைத்துக் கொண்டு அழகிய பாடல்களைப் பாடும் சக்தி

அவருக்கிருந்தது. அதனாலே அவருக்குப் 'பாரதியார்' என்ற பட்டமளிக்கப்பட்டது. அதுமுதல் அவர் சுப்பிரமணிய பாரதியார் என்று அழைக்கப்பட்டார்.

பாரதியார் திருநெல்வேலி ஹிந்து கல்லூரியில் படித்தார். அப்பொழுது அவர் பற்பல புலவர்களுடன் செய்த தமிழ்ப் போருக்கு அளவே இல்லை.

*1897*-ம் வருஷம் ஆனி மாதம் *15*-ந் தேதி கடையம் ஸ்ரீ செல்லப்பா அய்யர் பெண் ஸ்ரீமதி செல்லம்மாளுக்கும் பாரதியாருக்கும் விவாகம் நடந்தது.

கலியாணம்ஆகி ஒரு வருஷம் கழிந்தது. பாரதியாரின் தந்தையார் நோய் வாய்ப்பட்டு இறந்தார். அதனால் பாரதியாருக்கு மிகுந்த கஷ்டமுண்டாயிற்று. மேலும் படிப்பதற்கு வேண்டிய சௌகரியங்கள் இல்லாமற் போயின.

திருநெல்வேலி ஹிந்து கலாசாலை பாரதியாரை மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு அனுப்பவில்லை. மறுபடியும் மெட்ரிகுலேஷன் வகுப்பில் சேர்ந்து வாசிக்கச் சௌகரியமில்லை. என்ன செய்வதென்று பாரதியார் யோசித்துக்கொண்டிருந்தார்.

இப்படியிருக்கையில் காசியிலே பாரதியாரின் நெருங்கிய உறவினர் ஒருவர் வசித்து வந்தார். கேதார கட்ட மடம் கிருஷ்ண சிவன் என்பது அவர் பெயர். அவர் பாரதியைக் காசிக்கு வருமாறு அழைத்தார். 'சரி'யென்று சொல்லிப் பாரதியாரும் காசிக்குப் போனுர். அது 1901-ம் வருஷம்.

அங்கே அலகாபாத் சர்வகலாசாலைச் சார்பில் 'எண்டரன்ஸ்' வகுப்பில் சேர்ந்தார் அலகாபாத் சர்வகலாசாலையில் தாய்மொழி சம்ஸ்கிருதமாகக் கொள்ள வேண்டியதாயிற்று. அதுவரை பாரதியார் ஸம்ஸ்கிருதத்துக்குப் புதியவர். எனினும் அவர் சம்ஸ்கிருதம் தாய்மொழியாகக்கொண்டு அலகாபாத் சர்வகலாசாலைப் பரீக்ஷையில் தேறினுர். காசியிலே ஒரு வருஷம்தான் பாரதியார் வசித்தார்; அதன் பிறகு சில அசௌகரியங்களால் 1902-ம் வருஷம் எட்டயபுரம் திரும்பினுர்.

1902-முதல் 1904-ம் வருஷம்வரை பாரதியார் எட்டயபுரத்திலிருந்தார். அப்பொழுது எட்டயபுரம் சமஸ்தானுதிபதி அவருக்கு ஓர் உத்தியோகமளித்து ஆதரித்துவந்தார். இப்படியிருக்கையில் எட்டயபுரம் மன்னருக்கும் பாரதியாருக்கும் மனஸ்தாபம் ஏற்படவே

பாரதியார் வேலையைவிட்டு நீங்கினர்; மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் அதன்பிறகு சில மாதம் தமிழ்ப் பண்டிதராயிருந்தார்.

அப்பொழுது சென்னையில் ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய அய்யர் "சுதேசமித்திரன்" பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார். பாரதியார் கஷ்டப்படுவதைக் கேட்டார். பாரதியின் மாமா லக்ஷ்மண அய்யர் என்பார். உடனே அவர் ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய ஐயரிடம் பாரதியாருக்கு ஒரு வேலை யளிக்குமாறு கேட்கவே அய்யரும் ஒப்புக் கொண்டார். அது முதல் பாரதியார் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு உதவியாசிரியரானர்.

இரண்டு வருஷங்கள் கழிந்தன. பாரதியார் 'இந்தியா' பத்திரிகைக்கு ஆசிரியரானர். சூரத் காங்கிரஸுக்குப்பின் 'இந்தியா' பத்திரிகை மிகத் தீவிரமாக எழுத ஆரம்பித்தது. அக்காலங்களில் தேசபக்தர்கள் ஒவ்வொருவராக நாடு கடத்தப் பட்டார்கள்.

விரும்பத் தகாதவர் கையில் சிக்கி அவரால் தாம் சிறை வைக்கப் படுவதை, பாரதியார் விரும்ப வில்லை, ஆகவே அவர் தாமாகவே புதுச்சேரிக்குச் சென்ருர். அது 1908-ம்

வருஷம். சுமார் பத்து வருஷகாலம் பாரதியார் புதுவையிலிருந்தார்.

அக்காலத்திலே தான் அவர் பெரும்பாலான கவிதைகளைப் பாடினார். வைஷ்ணவப் பிரபந்தங்களை அவர் புதுவையிலிருக்கும் பொழுது படித்தார். அதன் பயனாகக் கண்ணன் பாட்டு எழுதினார். புதுவை வாசம் பாரதியாருக்குச் சிறைவாசத்தினும் கடுமையாகத் தோன்றியது. புதுவையில் அவர் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமன்று. அவருக்குப் பண உதவி செய்வாரில்லை. யாராவது அவர் பெயருக்குப் பணம் அனுப்பினால் அதுவும் அவருக்குச் சேராது. போலீஸ்தொல்லை சொல்லமுடியாது. அவரை மெதுவாகப் பிரெஞ்சுப் பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லவும் முயற்சிகள் நடைபெற்றன. 1918-ம் வருஷம் அவர் திரும்பவும் பிரிட்டிஷ் இந்தியா வந்தார். பின்னர் 1920-ம் வருஷம் முதல் மறுபடி 'சுதேசமித்திரன்' உதவியாசிரியரானார்.

சென்னையிலே திருவல்லிக்கேணியிலே துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் பாரதியார் வசித்தார். தினமும் பார்த்தசாரதி கோயிலுக்குப் போவது வழக்கம். சுவாமி

தரிசனம் செய்தபின் ஒரு தேங்காயைக் கொண்டு வந்து கோயில் யானையிடம் கொடுத்துப் போவார். ஒரு நாள் யானை மதங் கொண்டிருந்தது. அன்று பாரதியார் தேங் காயுடன் யானையிடம் சென்றார். மனிதர் களைப்போல மிருகங்களும் மக்களை நேசிப்பன என்ற கொள்கையில் பாரதியார் நம்பிக்கை கொண்டவர். ஆனதால் பாகன் சொல்லைக் கேளாது யானையிடம் சென்றார். அந்த மிரு கம் பாரதியாரைத் துதிக்கையால் தள்ளியது. உடனே கீழே விழ்ந்து விட்டார் பாரதியார். அதே சாக்கில் ஜுரங் கண்டது.

1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 11-ந் தேதி இறந்தார். எட்டயபுரத்திலே பிறந்த உடல், கிருஷ்ணம் பேட்டை மயானத்தில் சாம்பலாய், திருவல்லிக்கேணி கடலில் கலந் தது.

பிரேதத்துடன் பத்துபேர் கூட பின்செல்ல வில்லை! அதை நினைக்கும் பொழுதுதான் நெஞ்சு கொதிக்கிறது!

பாரதியாரைப் போற்றுபவர் பலர். வெறுக் கும் பிரகிருதிகளும் உண்டு. அவரைப் பற்றிக் குறை சொல்லும் 'அதிருப்தி அண்ணத்தை' களுமிருக்கிறார்கள். ஒரு மனிதன் என்றிருந்

தால் அவனிடம் குறையிருந்தே தீரும். பாரதியைப் பற்றிக் கூறப்படும் குறைகளிலே ஒன்று அவர் லாகிரிலோலர் என்பது' லாகிரிலோலராயினும் எக்காலத்திலும் அவர் தம் நினைவிழந்தது கிடையாது; இருக்குமிடம் தெரியாது பிதற்றியது கிடையாது; தம் கொள்கையினின்றும் வழுவியது கிடையாது. இரண்டாவதாக அவருக்குக் கவிதா வெறி, சக்திவெறி, தேசிய வெறி, எல்லாம் கலந்திருந்தன. ஆதலினால் அவர் பேச்சில் இம்மூன்றும் கலந்திருக்கும். அது கண்டு சிலர் பரிகசிப்பதுண்டு.

## பிரியவஸ்து

பாரதியாருக்குப் பூமாலையிலே பிரிய மதிகம். அரளிப்பூ முதலிய சிவப்புப் பூக்களையெல்லாம் தொடுத்துக் கழுத்திலே போட்டுக் கொள்வார். பனை நுங்கின்மீது அவருக்கு உயிர். ஷெல்லிமீது அவருக்கு அன்பு. ஷெல்லியின் கவிதை, கம்பராமாயணம், சிலப்பதிகாரம், தாயுமானார்பாடல் ஆகிய புத்தகங்கள் சதா அவர்கையிலிருக்கும். சில பெண்கள் உண்டு. 'ஒரு பாட்டுப்பாடு' என்று யாராவது கேட்டுவிட்டால் அப்பொழுது தான் 'பிகு' பண்ணிக் கொள்வார்கள். அந்த 'பிகு,

நம்ம பாரதியாரிடம் கிடையாது. 'பாடு' என்று யாராவது கேட்டால் உடனே பாட ஆரம்பித்து விடுவார். பெரிய தொனி. 'டக் டக்' என்று தாளம் விழும் அவர் பாடும்பொழுது. அர்த்தம் நன்றாக விளங்கும்; உணர்ச்சி பொங்கும்!

## தோற்றம்

நடுத்தர உயரம்; மா நிறம்; சுழலும் கண்கள்; அகன்ற நெற்றி, அதிலே குங்குமப் பொட்டு; துடிதுடிக்கும் உதடு. ஓயாது பாடும் வாய்; கறுத்து அடர்ந்து முறுக்கி விடப்பட்ட மீசை. தலையிலே சிவப்புத்துணியால் கட்டப்பட்ட பெரிய முண்டாசு; அதிலிருந்து வால் தொங்கும்; ஒரு கிழிந்தகோட்டு; கையிலே புத்தகம்; இராணுவவீரன் போன்ற அளந்த நடை. இதுதான் பாரதியாரின் தோற்றம்.

## குணம்

கள்ளங்கபடமற்ற உள்ளம், தவறு செய்தால் வருந்தும் சுபாவம், கையிலிருந்தால் இல்லையெனாது அளிக்கும் குணம், நண்பரிடத்து விசுவாசம், எல்லாரும் ஒன்றென மதித்தல் இவை பாரதியாரின் அருங்குணங்கள். அவர் சிரிப்பது அபூர்வம். சிரித்தால் வீரச்சிரிப்புப் பிறக்கும்.

# பாரதியின் கவிதை

பாரதியாரின் கவிதைகளைப்பற்றி எழுதுவதென்றால் அது பல பாகங்கொண்ட புத்தகமாகிவிடும். ஆயினும் அவரது கவிதைகளிலே முக்கியமான சிலவற்றைப்பற்றி அறிய வேண்டுவது அவசியம்.

தேசிய கீதங்கள்

பாரதியாரின் தேசிய கீதங்கள் உத்வேகமூட்டுவன; உணர்ச்சியளிப்பன. பாமர மக்மக்களும் லயிக்கக்கூடிய தாளக் கட்டுடன்-ராகத்துடன் - கூடிய இப்பாட்டுக்கள் புதிய ஜீவனளிக்கின்றன.

பஞ்சாலி சபதம்

பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' ஒரு சிறந்த சமதர்ம காவியம். அதிலே பல கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றைத் திரும்பத் திரும்பப் படித்தே இன்புற வேண்டும்.

—' தம்பீ

தழல் கொண்டுவா

கதிரைவைத் திழந்தான்

அண்ணன் கையை எரித்திடுவோம்'

என்ற அடிகள் அப்படியே கோபக் கனலைக் கொட்டுகின்றன!

ஆடை குலைவுற்று நிற்கிருள்—அவள்
ஆவென்றழுது துடிக்கிருள்—மாடு
நிகர்த்த துச்சாதனன்—அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கிருன் !

ஆகா ! என்ன அருமையான சித்திரம் ! இந்த நான்கு வரிகள்மூலம் ஓர் ஓவியத்தையே தீட்டிவிட்டார் கவி. அதோ ! பாஞ்சாலி கூந்தல் அவிழ்ந்து, ஆடை குலைந்து நிற்கிருள். கண்ணீர் தாரை தாரையாகப் பெருகுகிறது. 'ஏ ! கிருஷ்ணு ! நீயும் பார்த்துக்கொண்டிருக்கிருயே ! பெரியோர்களே ! என்ன அநியாய மிது !' என்று அவள் ஓலமிடுகிருள். அவள் கூந்தலைப்பற்றி யிழுக்கிருன் அந்தத் துஷ்டன் துச்சாதனன் !

இத்தகைய படக்காட்சியை நாலே வரிகளில் காட்டுகிருர் பாரதியார் !

### வேலன் பாட்டு

வேலன் பாட்டு என்று பாரதியார் பாடியிருக்கிருர்.

கொள்ளை கொண்டே அமராவதி வாழ்வு
குலைத்தவன் பானு
கோபன் பத்துக்கோடி தூணுக்
குறக் கோபித்தாய் !

இது அப்பாட்டில் வரும் ஒரு பகுதி. சாதாரணமாக இதன் அர்த்தம் விளங்கிவிடுகிறது.

இதற்குப் பாரதியார் மேலும் சொல்வாராம். "அமராவதி என்பது தேவருலகம். தேவருலகின் வாழ்வு குலேத்தவன் பானுகோபன். தேவருலகு முப்பத்து முக்கோடி தேவர்களைக் கொண்டது. இந்தியாவும் முப்பத்து முக்கோடி மக்களைக் கொண்டது; அமராவதி போல் பொன்கொழித்த பூமி.

அப்பூமியைச் சுரண்டியவர்கள் பத்து கோடி மக்களான பிரிட்டிஷ்காரர்கள் வேண்டுமானல் தாதாபாய் நவுரோஜியின் 'Poverty and Un-British Rule in India' என்ற புத்தகத்தைப் படித்துப்பாருங்கள். அந்தப் 'பத்துக் கோடி பேரைக் கோபித் தாய்" இதுதான் அவ்வரிகளுக்குப் பாரதி கூறும் உள்பொருள்.

## குயில் பாட்டு

குயில் பாட்டிலே பாரதியாரின் கற்பனை சக்தி பெருக்கெடுத்து ஓடுகிறது. ஓர் இனிய காதல் கவிதை அது. சிறந்த மனோபாவங்களும் உவமைகளும் பாடலிலே பொதிந்துள்ளன.

கண்ணன் என் காதலன் என்ற தலைப்பில் பாரதி பாடிய பாட்டுகள் உள்ளத்தை உருக்

குவன. பாங்கியைத் தூது விடுத்தல் என்ற பகுதியில் மிக நல்ல கற்பனை.

*எண்ண முரைத்துவிடில் தங்கமே—தங்கம்—*
*[பின்னர்*
*ஏதெனிலுஞ் செய்வமடி தங்கமே தங்கம்*

என்று கூறிய தலைவி முதலில் 'கன்னிகையா யிருந்து காலங்கழிப்போமென்று சொல்' என் கிருள். உடனே நீ இல்லாவிடில் வேறு கதி யில்லையா? 'அன்னிய மன்னர் பூமியிலுண் டாம்' என்கிருள். ஆனல் மறுபடி கோபம் போகவில்லை. சொன்ன சொல் தவறியவ னென்று இகழ்கிருள்.

*'சொன்ன மொழிதவறு மன்னவனுக்கே—*
*[எங்கும்*
*தோழமை யில்லையடி தங்கமே தங்கம்'*

என்கிருள். மறுபடியும் பாசம் வந்து மறைக் கிறது. ஐயோ! 'மையல் கொடுத்து விட்டுத் தங்கமே தங்கம் தலைமறைந்து திரிபவர்க்கு மானமு முண்டோ?'' என்று வெதும்பு கிருள். மேலும் கோபம் பொங்குகிறது.

*'ஆற்றங்கரையதனில் முன்னமொருநாள்-எனை*
*அழைத்துத் தனியிடத்திற் பேசியதெல்லாம்*
*தூற்றி நகர் முரசு சாற்றுவனென்றே*
*சொல்லி வருவையடி தங்கமே தங்கம்'*

என்று பயமுறுத்திச் சொல்லுகிருள்.

'சோரமும் சூழ்ச்சியும் வீரர்குலப்
பெண்ணிடம் வேண்டா'

மென்கிறாள். ஆனால்,

'அதைப்பற்றி மறக்குதில்லை பஞ்சையுள்ளமே
...............பாவிதனையே—உள்ளம்
நினைந்து மறுகுதடி தங்கமே தங்கம்
தீர ஒரு சொலின்று கேட்டு வந்திட்டால்-பின்பு
தெய்வமிருக்குதடி தங்கம்'

என்கிறாள். இவ்வரிகள் உள்ளத்தை உருக்கு கின்றன.

## தமிழ்ப் பற்று

தமிழ் மொழி மீதும், தமிழ் நாட்டின் மீதும் பாரதியாருக்கு அபாரமான பற்று. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்' என் கிறார். உடனே தமிழ்நாட்டின் நிலையை நினைந்து வருந்தி, 'ஊமையராய் குருடர் களாய் செவிடர்களாய் வாழ்கின்றோம்', பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு நாமமது தமிழரெனக் கொண்டு வாழ்தல் நன்றோ? என்று புலம்புகிறார். இந்த அடிகள் பாரதி யாரின் மனத்தைப் புலப்படுத்தும். 'செந் தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்

தேன் வந்து பாயுது' என்றார் கவி. தமிழ் நாட்டினிடம் அவர்கொண்ட பற்று எத்தகை யதென்று கூறவும் முடியுமோ ?

'மாதர் தம்மை யிழிவு செய்யும் மடமை யைக் கொளுத்துவோம்' என்கிறார் பாரதி. பெண்கள் அடிமையாக்கப்பட்ட அநியா யத்தை நினைக்கும்பொழுது அவர் நெஞ்சம் எப்படிக் கொதிக்கிறது பாருங்கள். பெண் கள் பொதுவாழ்விலே ஈடுபட்டால் கற்பிழப் பார்கள் என்பது சிலரது எண்ணம். அதற் குப் பாரதி மொழியாலே பதில் கேளுங்கள்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை, மாதர் திறம்புவ தில்லைபாம்.

என்கிறார் பாரதி. 'நாணம்' என்ற பெயரால் பெண்களைக் கோழையாக்குவதை அவர் கண்டிக்கிறார் பாருங்கள்.

'நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்'

'கற்பு' என்பது பெண்களுக்கு மாத்திரம் உரிய தனியுடைமை என்று கருதும்

அயோக்கியத் தனத்தைப் பாரதியார் வெறுக்கிறார்.

கற்புநிலை யென்று சொல்ல வந்தாரிரு
க்கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்

என்கிறார். பாரதி எழுதிய வசன நூல்களிலே 'மாதர்' என்பது ஒன்று. அதிலே 'கற்பு' பற்றி அவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

நான்தான் ஆரம்பத்திலேயே பாரதியைப் பற்றி விமர்சனம் செய்தால் அத்தியாயம் அத்தியாயமாக எழுதவேண்டிவருமென்றுசொன்னேனே !

சக்தியிடத்திலே அவர்க்குள்ள பக்தியையும், கண்ணன்மீது அவர்க்குள்ள பிரேமையையும் எடுத்துச் சொல்லமுடியாது.

பாரதியின் சிறுகதைகள் மிக நன்றாயிருக்கும். ரவீந்திரரின் கதைகள் சிலவற்றைப் பாரதியார் மொழி பெயர்த்திருக்கிறார். ஆங்கிலத்தில் பாரதியாருக்குப் புலமையில்லையென்று சொல்லமுடியாது. அவர் எழுதிய 'அக்னி முதலிய கவிகள்' அதற்குச் சான்று பகரும் 'சந்திரிகையின் கதை'யைப் படிக்கும்பொழுது கதை முடியவில்லையே ! என்று ஏங்கவேண்டி யிருக்கிறது. கதையை அவர்

முடிப்பதற்குள் யமன் அவசரப்பட்டுவிட்டான். என்ன செய்யலாம்!

பாரதியின் நூல்களை ஒவ்வொருவரும் படித்துப் படித்துத் தாமே இன்புறவேண்டும். எவ்வளவு எளிய நடையில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெரிவித்திருக்கிறார். அதற்கு விமர்சனம் வேறு செய்ய வேண்டுமா?

# பாரதி கடிதம்

**ஸ்ரீ.** நெல்லையப்ப பிள்ளைக்குப் பாரதியார் எழுதிய கடிதம் கீழே பிரசுரிக்கப்படுகிறது. அக் கடிதத்தில் பொதிந்து கிடக்கும் கருத்துக் கள் நேர்நின்று உணர்ச்சியுடன் கூத்தாடு கின்றன. பாரதியின் மனத்தை அறிய இக்கடிதமே போதும்.

புதுச்சேரி
*19th July 1915*

எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீ நெல்லை யப்ப பிள்ளையைப் பராசக்தி நன்கு காத் திடுக.

தம்பி,-மாதத்துக்கு மாதம், நாளுக்கு நாள், நினதறிவு மலர்ச்சிபெற்று வருவ தைக் காண்கிறேன். நினது உள்ளக் கமலத் திலே பேரறிவாகிய உள்-ஞாயிற்றின் கதிர் கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகுமென்றே கருதுகிறேன்.

ஓ

நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிடவேண்டு

மென்று பாடுபடுதலே நாம் வலிமை பெறு தற்கு வழியாகும். வேறுவழியில்லை.

ஹா ! உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு பாஷைகள் தெரிந்திருந்து, அந்த பாஷைப் பத்திரிகைகள் என்ன அற்புத மான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத் தெரிந்துகொள்ள முடியுமானால் - தமிழ் நாட்டிற்கு எத்தனை நன்மையுண்டா கும் ? தமிழ், தமிழ் - என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய இன்பம்-தமிழில் ஏறிக் கொண்டே போகவேண்டும்.

ஓ

தம்பி,-நான் ஏது செய்வேனடா! தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்ப தைப் பார்க்கும்போது எனக்கு வருத்த முண்டாகிறது. தமிழனைவிட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு ஸம்மதமில்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது.

தம்பி,—உள்ளமே உலகம். ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே, மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழேவிழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங் காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ, பற! பற!-மேலே, மேலே, மேலே.

ஃ

தம்பி:—தமிழ்நாடு வாழ்க என்றெழுது. தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது. தமிழ் நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சிபெற்று வளர்க என்றெழுது. தமிழ் நாட்டில் ஒரே ஜாதிதான் உண்டு—அதன் பெயர் தமிழ் ஜாதி. அது ஆர்யஜாதி என்ற குடும்பத்திலே தலைக்குழந்தை என்றெழுது. ஆணும் பெண்ணும்-ஒருயிரின் இரண்டு கண்கள் என்றெழுது.

அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றெழுது. பெண்ணைத் தாழ்மைசெய்தோன்

கண்ணைக் குத்திக்கொண்டான் என்றெழுது.

பெண்ணை அடைந்தவன் கண்ணை அடைந்தான் என்றெழுது.

தொழில்கள், தொழில்கள், தொழில்கள் என்று கூவு.

தப்பாக வேதம் சொல்பவனைக் காட்டிலும் நன்றாகச் சிரைப்பவன் மேற்குலத்தான் என்று கூவு.

வியாபாரம் வளர்க, யந்திரங்கள் பெருகுக. முயற்சிகள் ஓங்குக, ஸங்கீதம், சிற்பம், யந்திர நூல், பூமிநூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு.

சக்தி, சக்தி, சக்தி என்று பாடு.

தம்பி :-நீ வாழ்க.

உனது கடிதம் கிடைத்தது. குழந்தைக்கு உடம்பு செம்மையில்லாமல் இருந்தபடியால் உடனே "ஜவாப்" எழுத முடிய முடியவில்லை. குழந்தை புதிய உயிர்கொண்டது. இன்று உன் விலாசத்துக்கு "நாட்டுப் பாட்டுக்கள்" அனுப்புகிறேன். அவற்றைப்

பகுதி பகுதியாக உனது பத்திரிகையிலும், ஞான பானுவிலும் பிரசுரம் செய்வித்திடுக. "புதுமைப் பெண்" என்றொரு பாட்டு அனுப்புகிறேன். அதைத் தவறாமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கி எழுதுக. எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டுபிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக. தம்பி-உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை? நீ வாழ்க.

உனதன்புள்ள

பாரதி